

# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 மாசி 5 (17-2-74) | இதழ்: 32


★


உள்ளே......

பட்டம் எதற்கு பணி செய்திடவா நாட்டின் வாட்டம், நலிவு போக்கவா?
(அண்ணாவின் சொற்பொழிவு)

★

உதயசூரியன்-அண்ணனின் இதய சூரியன்!
(தலையங்கம்)

★

பச்சைத் தமிழர்க்குப் பண்பல்ல!!
(கட்டுரை)

★

'சுதா அழுதுகொண்டிருந் தாள் ஓசைப்படாமல்!'
(சிறுகதை)


★

## பெருஞ்சுடரைத் திரும்பத்தா...

(நெல்லை. சு. முத்து)

புத்தன்ஏசு காந்தியென்று பேசு கின்றோம்!
போதனைகள் தந்தவரைப் பாடு கின்றோம்!
எத்தனைபேர் இப்புவியில் தோன்றினாலும்
எல்லோரும் அண்ணாவாய் இருக்க மாட்டார்!
முத்தமிழ்க்கு மூத்தமகன்! அறிவின் பாகன்!
மூப்படைந்த தேக்குமரம்! அழகுச் செல்வன்!
இத்தரைக்குக் காஞ்சிதந்த இமய மன்னன்!
இறுமாப்பே அடையாத ஏந்தல், உண்மை!

சாதிபேதம் பேணுவோர்க்குச் சாட்டை போன்றோன்!
சாத்திரங்கள் பேசுவோர்க்கு ஈட்டி போன்றோன்!
ஆதிஅந்தம் அற்றதமிழ் மொழியைப் போற்றி
அர்த்தமுள்ள பகுத்தறிவில் நாட்டம் கொண்டார்!
வாதித்து நிற்போரை வருத்தி வென்றார்!
வருந்தியவர் தம்கருத்தைத் திருத்தி நின்றார்!
நீதிபேதம் இல்லாத ஆட்சி செய்தார்!
நேர்மையான கலைஞருக்கு வழியும் விட்டார்!

கண்ணிரண்டால் காண்கிலாத கால தேவா!
காஞ்சிமகன், தமிழன்னை மடியில் முல்லை,
மண்ணுலகை ஆண்டநலம் கண்டதாலோ
வாழ்வொழித்தெம் அண்ணாவை எடுத்துச் சென்றாய்?
விண்ணுலகில் கலைக்கழகம் நடத்து தற்கோ
விஞ்சுபுகழ் முன்னேற்றக் கழகம் விட்டே
அண்ணாவுயிர் தனைஎடுத்து விரைந்து சென்றாய்!
அரசியலின் பெருஞ்சுடரைத் திரும்பத் தாயேன்!

★

விலை: 0-25 காசு

# பச்சைத் தமிழர்க்குப் பண்பல்ல!!

(பொடிப் புலவன்)

வணக்கத்திற்குரிய பச்சைத் தமிழர்க்கு, மற்றவரை வணங்கு என்று வழிகாட்டிய அறிஞர் அண்ணாவின் கடைக்குட்டித் தம்பி பொடியன் எழுதுவது, ஆயிரமாயிரமாக நமக்குள் அழிக்க முடியாத வேறுபாடுகள் இருந்தாலும், நல்ல தமிழ் மகன் தாங்கள் என்பதால் தங்களின் நலனும்; வளனும் மேன்மேலும் வளரவேண்டும் என்று நாளும் விரும்பிய நல்லவரின் தம்பி என்னும் முறையிலே இம்மடலைத் தங்களை நோக்கி விடுகிறேன்.

ஒகோ என்று இருந்த தாங்களும், தங்கள் கட்சியும், 'ஏதோ இருக்கிறவரையில் இருக்கட்டும்' என்னும் நிலையை ஏன் அடைந்தது என்பதைத் தாங்கள் இன்னும் உணர்ந்தபாடில்லை என்பதை அண்மைக் காலப் பேச்சுக்கள் அடையாளங் காட்டுகின்றன.

'என்னமோ ஒரு கட்சியாம்; இருந்து தொலைக்கட்டுமே' என்றிருந்த தி. மு. கழகம் ஒரு மாநிலத்தின் ஆளுங் கட்சியாக, இந்தியத் துணைக் கண்டத்து அரசியல் கணக்கர்களின் அன்பினைப் பெற்ற இயக்கமாக வளர்ந்ததற்கு என்ன காரணம் என்பதையும் இன்றைய நிலையில்கூட தாங்கள் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

ஒருமுறை எங்கள் அண்ணன் உங்களைப் பார்த்து "நீங்கள் திட்டியே தேய்கிறீர்கள்; நாங்கள் பாராட்டியே வளர்கிறோம்" என்றதை இனிமேலாவது எண்ணிப் பாருங்கள் என்பதற்காகவே இம்மடலை வரைகிறேன்.

ஒருகணம் ஒன்றை மட்டும் நினைத்துப் பாருங்கள்!!

உட்கட்சிப் பூசலால் தங்களுக்கும் ஆச்சாரியார்க்கும் போராட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் வெளியிலிருந்து ஒரு ஆதரவுக் குரல் எழுந்ததே, அந்தக் குரலுக்குரியவர் அண்ணாதானே!

'குடியாத்தம்' தங்களின் ஆட்சிக் கோலைப் பறித்துவிடக் கூடாது என்பதற்காகத் தங்களுக்கு ஒரு கை துணை நின்றதே, அந்தக் கை எங்கள் அண்ணன் கைதானே! 'கோடு தாழ்ந்தது, குன்றம் உயர்ந்தது' என்று எழுத்து வாள் ஒன்று சுழன்றதே, அந்த வாள் எங்கள் அறிஞர் பெருந்தகைதானே!

இப்படி எத்தனையோ கூறலாம்; தினையளவு நன்றியினைப் பனையளவாக எண்ண வேண்டிய பரம்பரையில் தாங்கள் வந்தமையால் இவைபோதும் என்று இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

இதெல்லாம் எதற்காகச் சுட்டுகிறாய் என்றுதானே கேட்கிறீர்கள். சொல்லுகிறேன்!

தங்கள் கட்சியைச் சேர்ந்த 'காந்தியின் சீடர்கள்' அண்ணாவின் அரசியல் வாழ்வு தொடங்கிய காலத்தில் இருந்து சொல்லக்கூடாத வார்த்தைகளையெல்லாம் தொடுத்து எழுதியும் பேசியும் வந்தார்கள். கருவாட்டுக் கடையின் மணத்தை எழுத்தில் காட்டி வந்தார்கள். கர்மவீரராம் தாங்கள் அவர்களை அதட்டியதுண்டா? இல்லை!! தடுத்ததுண்டா? இல்லை!! தவறெனச் சுட்டிக் காட்டியதுண்டா? இல்லை!!

போகட்டும்!!

மறைந்த ஒருவரைப் பற்றி அவர் சாதாரண ஆளாக இருந்தாலும் குறைசொல்லிப் பேசுவது கொடுமை என்னும் பண்பாட்டை மறந்து 'திருட்டுக் கதைத் தியர்களும்' இருட்டு மனப் பேயர்களும், குருட்டுத்தனமாக ஒரு நாட்டின் சரித்திரத்தையே மாற்றிய தலைவனைப் பற்றித் தரங் கெட்டு, விமர்சனம் செய்கிறார்களே, கர்மவீரரே! இது நியாயந்தானா?

வெறுப்பென்னும் 'மை'யை ஊற்றிய பேனாவிலிருந்து விமர்சனம் ஒழுங்காகவா வெளிவரும்?

எழுத்தில், பேச்சில், இனவிழிப்பில் தன்னுடைய பங்கினை மிகுதியாக்கிக் கொண்ட மேலோனை இன்றும் முறைகெட்டு எடைபோடும் மூதேவிகளை, மூர்க்கர்களை, மூடர்களைத் தாங்கள் ஏன் கண்டிப்பதில்லை? இதுதான் காந்தீயமா? அல்லது கறுப்புக் காந்தியாரின் கண்ணியம் இதுதானா?

'மாற்றான் தோட்டத்து முல்லையும் மணக்கும்' என்று தங்களைப் பாராட்டிய தலைவனைக் காளான் கூட்டங்கள் கண்மூடித் தாக்கும்போது கண்மூடிக் கிடக்கலாமா?

இப்படியெல்லாம் தங்களைக் கேட்க நினைக்கிறேன்; ஆனால் கேட்க முடியவில்லை! ஏன்? உங்கள் முதுகிலேயே உலக அழுக்கு இருக்கும்போது, தெருப்புழுதிகளைத் திருத்துங்கள் என்று எப்படிக் கேட்க முடியும்?

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் தலைவரின் தொண்டர்கள் எடுக்காமலேயே கவிழ்ப்பதில் என்ன வியப்பு இருக்கிறது?!

கோவைக் கூட்டத்தில் கொள்கை முழக்கமிட வேண்டிய தாங்கள், வாக்களியுங்கள் என்று வரங் கேட்க வேண்டிய தாங்கள் எங்கள் அண்ணன்மீது ஏசல் கணைகளை ஏவிவிட்டிருக்கிறீர்களே, இதுதான் தலைமைக்கு உரிய பண்பா?

'போலி வாக்குறுதிகளைத் தந்தவர்', 'மலிவான பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்; 'மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்' என்றெல்லாம் மலிவுப் பதிப்பு போல், மஞ்சள் ஏடுகளைப்போல் பேசியுள்ளீர்களே, அதே பாணியில் எங்கள் வாய் திறக்குமேயானால், எங்கள் கை ஓடுமேயானால் அரசியல் அரசியலாக இருக்குமா?

வறண்ட தலையைக் கண்டால் வா என்று அழைத்து தலையில் எண்ணெய்த் தடவக் கூடாதா? பள்ளிக்குச் செல்லக்கூடாதா என்றெல்லாம் கேட்ட அரசியல் வாதிக்கு, அதைப் படமாக்கி ஏடுகளில் போடவைத்த அரசியல் வாதிக்கு மலிவான பிரச்சாரமாக மற்றவர்களின் பேச்சு படக்கூடாதே! தங்களுக்குப் படலாமா? 'சிவப்பு நாடா' செய்ய வேண்டிய சின்னத்தனங்களை, படுகுழி ஜெயகாந்தன்கள் செய்யவேண்டிய சில்லறைத் தனங்களைப் பெரியவராகிய தாங்கள் செய்யலாமா?

கழக வரலாற்றினை அறிந்தவராயிற்றே தாங்கள், தங்களைக் கேட்கிறேன் நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள், தங்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் என்றாவது கீழ்த்தரமாகப் பேசிய பேச்சை நாடு கேட்டதுண்டா?

'ஆளவந்த மூஞ்சியைப் பாரு' என்றோ, 'படுத்துக்குனே ஜெயிப்பேன்' என்றோ அலட்சியமாக

[4-ஆம் பக்கம் பார்க்க]



# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 17—2—74 | இதழ் 32

## உதயசூரியன் - அண்ணனின் இதய சூரியன்!

தெளிவான சிந்தனையுடன் தேவையான முடிவினை எடுத்துத் தீரவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது, புதுவை-கோவை வாக்காளப் பெருமக்களுக்கு!

மூன்று அணிகள் மோதுகின்றன. வேகத்திற்கு இடங்கொடுக்காமல், விவேகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திட வேண்டிய நேரம்—

மோகத்திற்கு ஆட்படாமல், கொள்கை முத்திரைக்கு மதிப்பளித்திட வேண்டிய தருணம்—

புதுவை, கோவைப் பெருமக்களுக்கு அவ்வாய்ப்புக் கிட்டியுள்ளது!

நல் வாய்ப்பு! நழுவ விடாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

'சுவை'யின்றி எதையோ எழுதுவதாக எண்ணாமல், சற்று சிந்திக்க வேண்டும்!

நாளும் ஓர் ஆட்சியைக் கவிழ்த்தே பழக்கப்பட்ட நாயகியின் காங்கிரஸ்,

குஜராத் மாநிலத்தையே குழப்பத்தில் ஆழ்த்திவிட்டு, 'கோவை' மண்ணில் 'கூட்டு' என்கிறது—

சிவசேனைப் பாம்புக்குப் பால் வார்த்து— பம்பாய் மாநகரில் பைந்தமிழர் வாழ்வைப் பதம்பார்த்து — முடித்துவிட்டு 'புதுவை' மண்ணில் 'பழமை'யுடன் பல்லவி என்கிறது!

வடபுலங்களில் எல்லாம் வாய்க்குவந்தபடி இந்திராமேல் வசைபுராணம் பாடிவரும் பழைய காங்கிரஸ்,

புதுவையிலும் கோவையிலும் புதுப்புராணம் பாடுகிறது! புரியவில்லை, நமக்கு!

**"அகில இந்திய"** என்னும் நிலையிலிருந்து மாறி, பழைய காங்கிரசை தமிழகத்தோடு **'தனிமைப்'**படுத்திய தள நாயகர் கோவையிலும் புதுவையிலும் உலா வருகிறார்.

உத்திரப்பிரதேசம், குஜராத் அங்கெல்லாம் இந்திரா அம்மையாரின் ஆணவத்தை எதிர்த்துப் போர்க்கொடி!

தமிழகத்திலும் புதுவையிலும் அம்மையாரின் கட்சியுடன் அரவணைப்பு,

முரண்பாட்டின் முகாமாகப் பழைய காங்கிரஸ்—'விருதுகள்' அத்தனையையும் இழந்து வெறுங்கையோடு முழம்போடுபவராக அதன் தலைவர்—பாவம்!

சந்தர்ப்பவாதம் என்பதன் மறுபெயராக விளங்கும் 'வலது'களின் நிலையோ அதனை விடப் பரிதாபம்! யாரிடமும் கூட்டுச் சேர்ந்து 'லாபம்' பெறுவார்கள்! பின், காலைவாரி விடத் துடித்து, தாங்களே கால் தடுமாறித் தலைகுப்புற வீழ்வார்கள்! இது, அவர்களின் வாடிக்கை!

அதனால் 'வேடிக்கை' காட்டுவோருடன் சேர்ந்து அரசியல் வியாபாரம் செய்வதில் வியப்பு ஒன்றும் இல்லைதான்!

ஆனால், 'ஆட்டம்' போடும் அனைவருமே, ஒன்றை உணர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

**அரசியல் என்பது ஏதோ வேடிக்கை விளையாட்டல்ல.**

தலைமை என்பது ஏதோ தலையிலே மை தடவி ஏமாற்றுவது அல்ல!

**தேர்தல் என்பது எப்போதும் 'திண்டுக்கல்'லாய் இருந்து விடுவது அல்ல! 'பல்லாவரம் கண்டோன்மெண்டாக' அஃது அமைந்துவிடுவதும் உண்டு!**

'ஏனோ ஒரு மயக்கத்தில்' இருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டிய உண்மை இது!

மோதுகின்ற மூன்று அணிகளில், நம் கண்முன் வந்து நிற்கவேண்டியது, முன்னேற்றக் கழக அணி!

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை—பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்கள் அத்தனைக்கும் பாடுபட தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஆற்றல் மிக்க தம்பியரின் பாசறை—

அதுவே, அண்ணா வகுத்த கொள்கைவழி நடைபோடும் அவர் அமைத்த கழகப் பாசறை!

—அவர் கண்ட கொடி நிழலில் நின்று சூளுரைக்கும் கழகக் காவலர்கள் **கலைஞர், நாவலர், பேராசிரியர்**... இன்னும் இலட்சோப இலட்சம் தம்பியரின் அணிவகுப்புப் பாசறை!!

—தமிழ் இனத்தைக் காக்கும் படைவீடு! இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தும் காவல் அரண்!

ஆம்! அண்ணா கண்ட கழகம், தி. மு. க. அவர் நின்ற சின்னம் **உதய சூரியன்!**

ஏழையரின் வாட்டம் போக்கிட 'நோட்டடித்தால் போதாது' என்று இந்தியப் பொருளாதாரத்தை அளந்து சொன்ன **அறிஞர் அண்ணாவின் இதய சூரியன், அதுவே உதயசூரியன்!**

கோவை, புதுவை வாக்காளப் பெருமக்களின் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டிய சின்னம், உதயசூரியன்!

**"தெளிவான கொள்கை—திடமான போக்கு தமிழ் நாட்டுக்காகவும் புதுவைக்காகவும் மத்திய அரசுடன் வாதாடிப் போராடும் வல்லமை பெற்றது—தி. மு. கழகம்தான் என்பதை ஊரறிய. உலகறிய வாக்காளர் உணர்வுகளில் பதிய, உரைத்திடுக உடனே!"**

என்ற **கழகத் தலைவர், முதல்வர் கலைஞர்** அவர்களின் ஆணைவழி, கழகச் செயல் வீரர்கள் ஒவ்வொருவரும் செயல்பட்டாகவேண்டும்.

'உதயசூரியன்' வெற்றிவாகை சூடிட உழைத்தாக வேண்டும்.

காலமோ குறைவு! கடமையோ பெரிது!
கழகக் காளையே! செயல்படு, விரைந்து!

**—மணிவேந்தன்**

[2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அண்ணா பேசியதுண்டா? வீட்டில் இருக்கும்பெண்களையெல்லாம் வீதியிலே நிறுத்திய வேலையைத் தங்கள் சீடகோடிகள் செய்தபோதெல்லாம், பொங்கிவந்த தம்பிகளைத் தன் புன்னகையால் கட்டிப்போட்ட கண்ணியத்தின் பேரறிஞன் கனல் தெறிக்கப் பேசியதுண்டா?

'ஐதராபாத்' பேங்கிலே ஐம்பது இலட்சம் ரூபாய்'; அவருக்கென்ன 'யோகம்'; அவர் வாழ்வே 'மங்களம்' என்றெல்லாம் சேற்றையள்ளி மற்றவர்கள் அடித்த போதெல்லாம். அதே வழியைப் பின்பற்றிய அண்ணாவின் தம்பிகளைப் பார்த்ததுண்டா?

எவ்வளவு நேரமாகி இருக்கும் இதுபோல் பேச; அல்லது எழுத? பேசினோமா? இல்லையே! எழுதினோமா? இல்லையே!!

'கள்ள நோட்டோடு' தங்களை உறவுபடுத்திப் பேசினார்களே, இதுதான் சரியான ஆயுதம் என்று அண்ணா அதைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராய்ச் சுற்றியதுண்டா?

'பேசிக்கொள்ளுகிறார்கள்', 'கருதப்படுகிறது', 'இருந்தாலும் இருக்கலாம்', என்றெல்லாம் ஊழல் புராணங்களைக் காட்டி ஊர்சுற்றி வந்தீர்களே, அதே 'பேசிக் கொள்ளுகிறார்கள்' என்று எங்களால் பேசியிருக்க முடியாதா? 'இருந்தாலும் இருக்கலாம்' என்று எழுதியிருக்க முடியாதா? முடியும்! ஏன் செய்யவில்லை; எங்கள் அண்ணனுக்கு இதயம் இருந்தது; அங்கு இடமும் இருந்தது; அதில் இன உணர்வும் இருந்தது. உங்களுக்கு......?

இதயமும் இருக்கிறது; அங்கு இடமும் இருக்கிறது; ஆனால் இன உணர்வுதான் இல்லை!

என்ன செய்வது?

இன்றைக்கும் தூக்கமுடியாமல் தூக்கித் தாங்கள் எறியும் அரசியல் கருத்துக்களைப் பச்சையாக விமர்சனம் செய்து தங்களிடம் உள்ள 'பசையினைச்' சுட்டிக்காட்ட விரும்பாமல் நாங்கள் இருப்பதற்கும் காரணம் அந்த இன உணர்வுதானே!

'நானில்லையேல் அந்த இடத்தில் ஒரு பச்சைத் தமிழன்தான் அமர முடியும்' என்று நெருக்கடியான நேரத்தில் நிமிர்ந்து ஒரு குரல் எழுந்ததே; அதற்கும் காரணம் இன உணர்வுதானே!!

தங்களையும், தங்கள் தலைமையினையும் பாராட்டிப் பேசிவரும் கழகத் தொண்டனைக் கேளுங்கள் அவன் சொல்வான் அந்த இன உணர்வின் எழுச்சியை!!

பச்சைத் தமிழரே! அகில இந்திய அரசியல் ஒரு தமிழன் கையில் இருக்கிறது என்று மகிழ்ந்த் உள்ளத்திற்குச் சொந்தக்காரனின் இந்தக் கருத்துக்களை இனியேனும் எண்ணிப் பாருங்கள்!!

காழ்ப்பினை மறந்து கருதிப் பாருங்கள்;
அரசியல் பேசுங்கள்!
எங்கள் அண்ணாவைத் திட்டவேண்டும்!!
உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்!
உங்கள் சீடகோடிச் சித்தான்களை எச்சரிக்கிறேன்!

இந்த வேலையை நாங்களும் செய்தால், இந்தியாவில் எல்லா மேதைகளின் சமாதியும் சகதிகளாகப் போய்விடும்!!

ஏன்?

'பொய்' ஒரே ஒரு தோட்டத்தில்தானா பூக்கும்! 'வசை' ஒரே ஒரு வாய்க்குத்தானா சொந்தம். தேவையானால் பிறகு எழுதுகிறேன்.

---

# புதுவை - கோவை வாக்காளர்களே!

## சிந்திப்பீர் - வாக்களிப்பீர்!

குஜராத்திலே பஞ்சம்!
மக்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர்!

ஒரு பிடி சோறு கேட்கும் மக்களுக்கு துப்பாக்கி ரவைகளைப் பரிசாகத் தருகிறது காங்கிரஸ் அரசு!

மராட்டியத்திலே மக்கள் பட்டினியால் கதறுகின்றனர்!

மேற்கு வங்கத்திலே உண்ணப் போதிய உணவில்லை!

கேரளத்திலே 'அவுன்சு' கணக்கில்தான்
அரிசி கிடைக்கிறது!

பீகாரில், ராஜஸ்தானில், காங்கிரஸ் ஆளும்
எல்லா மாநிலங்களிலும் பஞ்சமோ பஞ்சம்!

நாடெங்கும் பிரெஞ்சுப் புரட்சிபோல நிலைமை!

பசியால் கதறும் மக்களுக்கு உணவு கொடுக்காமல் மேரி அண்டாய்னெட்போல பவனி வருகிறார் பிரதமர் இந்திரா காந்தியார்!

ஆம்; இந்தியா முழுவதும் மக்கள் அத்யாவசியப் பண்டங்களுக்காக பொழுதையெல்லாம் கியூ வரிசையில் கழிக்கின்றனர்!
ஆனால்.........

தமிழ்நாடு ஒன்றுதான் பாலைவனத்துப் பசும்சோலையாய் காட்சி தருகிறது!

அவன்சு கணக்கில் அரிசி சாப்பிடுவோருக்கு தமிழக அரசு தான் 'டன்' கணக்கில் அரிசி தருகிறது!

—இது கழக அரசின் மகத்தான சாதனையல்லவா?

**வயிறார உணவு**
**அமைதியான வாழ்வு**
**நிம்மதியான நிலை**

—தமிழகம் தவிர வேறெந்த மாநிலத்தில் உண்டு — இந்த நிலைமை?

**புதுவை - கோவை வாக்காளப் பெருமக்களே சிந்திப்பீர்!**

**ஆதரிப்பீர் உதய சூரியன்!**



# பட்டம் எதற்கு பணி செய்திடவா

## நாட்டின் வாட்டம், நலிவு போக்கவா?

### மதுரை பட்டமளிப்பு விழாவில்

## அறிஞர் அண்ணா பேருரை

ஆளுநர் அவர்களே!

இணைவேந்தரவர்களே!

துணைவேந்தரவர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

இன்று பட்டம் பெற வந்துள்ள இளந்தோழர்களே! மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கிறேன். இப் பல்கலைக் கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது; இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இந்த வாய்ப்பினை நான் பெற்றிடச் செய்த பல்கலைக் கழகப் பெரியோர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்மாடக்கூடலில் நிற்கிறேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது இம் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

இங்கு நின்றிடும் எவருக்கும் அன்றொரு நாள். அறிவாளர் அரண் அளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர், தமிழ் வளர்த்து, தமிழர் தம் தனிச் சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணி மெச்சக் கோலோச்சிவந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும்—நினைவலைகள் எழத்தான் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகிறேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி, அறிவுப் புனலாடி, அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன்; இன்பத் தேன் சுவை நுகர்கின்றேன்,

மனக்கண்ணால் காணுகின்றேன்; முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், மூதறிஞர், காணீர் தமிழ் நெறியை, தரணியோர் மெச்சி ஏற்றிடத்தக்கதோர் நன்னெறியை, ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்தவண்ணம் திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

தத்தமது ஏடுகளை, வித்தகர் போற்றிடத்தக்கவென விளக்கி, புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெலாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு, இங்கிருந்தன அற்றை நாளில்!

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்! நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது. அச்சம் தவிர்த்திடுக! நவநிதியந் தந்திடினும் நத்திக் கிடந்திட இசையாதீர்; வாய்மைதனைக் காத்திடும் வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந் தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம். இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அரு மரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம். ஏறுநடை போட்டிடுக! ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உமதாற்றல் பயன்படட்டும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறி நிற்கின்றார்கள்; காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை.

பாண்டி நாடதற்குப் பாங்களித்த மாமதுரை. தமிழ் மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை. தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச் செய்த திருமதுரை. வீரப் போராற்றலால் மட்டுமின்றி, அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும், பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம். 'அந்த நாளும் வந்திடாதோ!' என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலைபெறுவர் மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின். ஆம்! ஆயின், ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம், எந்நாளும் அச் சிறப்பு இருந்திடச் செய்திடலாம். இவரெல்லாம் அதற்கே தமை ஒப்படைத்துள்ளார்கள். இவர் ஆற்றல் துணைகொண்டு தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்னோர் உறுதியினைப் பெறுகின்றேன்; பெறுகின்றார்; பெற்றிடச் செய்கின்றீர், பெரும் புலவர்களாம் நீவிர், பட்டமளிப்பு விழாவினிலே பாங்குடனே வந்துள்ள அறிவரசராம் நீவிர், உமக்கென்ன உரைத்திட உளது? உம் உள்ளம் அஃதறியும். உமது பெரும் பேராசிரியர் கருத்து அளித்துள்ளார்; என் கடன் நீரறிந்ததனை மீண்டும் நினைவுபடுத்துவதேயாகும்.

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின், இஃது முடிவா, தொடக்

கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவியில் வீழ்ந்திடும் கேள்வி?

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கி பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம்.

தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ!

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானே அணிகலனைச் செய்து நில மாது பூட்டிக்கொள்கின்றாள்? — இல்லை — மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு—பொற்குவியல் — புள்ளிக் கலாப மயில்—கார்மேகம்—நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள் இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொதுவுடைமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர். எனினும் எடுத்துரைக்க வந்துள்ளேன். இயம்புகின்றேன்.

எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல் இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில் அந்நாட்டினில் தொடர் தொடராய், அறிவாளர் தோன்றியவண்ணம் இருந்திட வேண்டும்; நன்று இது. இது தீது; நமதிது, பிறர் தந்ததிது; மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப் படை எழுந்தபடி இருந்திட வேண்டும், அதற்கான பயிற்சிக்கூடம் வேறெதுவாய் இருந்திட முடியும்? இஃதே அப்பயிற்சிக்கூடம், பல்கலைக் கழகம்; நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக் கோட்டம்.

*1964—66*ஆம் ஆண்டுத் தேசியக் கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் சிந்தித்து உண்மை அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து, ஆளடிமையாகாமல், அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்—என்ற கருத்துப்பட அக்குழுவினர் கூறியுள்ளனர்.

ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்; இன்றேல் சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்—என்றுரைக்கின்றார்—எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ராண்டு ரசல் எனும் பெருமகனார்.

ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச் சென்றார்கள் இவை போன்றஏற்றமிகுநல்லுரைகள்பற்பலவற்றை, இடையில் அவை மறந்தோம்; அல்லலுற்றோம்; இன்று அவனியின் பிற பகுதிகளிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; நமக்குண்டு அந்தக் கருவூலம் நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம்; நாம் தமிழர் என்பதனை அறிகின்றோம்; நானிலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கின்றோம்.

பட்டம் பெற்றிடும் இத்திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள். ஐயமென்ன? ஆயினும், உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று உறுதி கொண்டிடவும் உள்ளதோர் நன்னாள், நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந்நாள்.

மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டுப் பருவத்திலுள்ளது.

நூற்றாண்டு விழா நடாத்தி முடித்திட்ட பல்கலைக் கழகங்கள் உள்ளன—நம் நாட்டில்.

பத்தோடு பதினொன்று என்ற முறையினிலே அமைந்ததன்று மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழரின் தனித் தேவை ஒன்றினைக் கருத்திற் கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக் கழகம்.

நூறு ஆண்டுகட்கு முன்னம் பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு தன்னரசு இழந்து, தலை கவிழ்ந்து இருந்தது. மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர்; பல்வேறு துறைகளிலே சீர்குலைவு; எங்கும் அறியாமை மட்டுமன்று. இந்நாட்டினர் ஏதும் அறிந்திடவல்லர் அல்லர் என்ற எண்ணம் கப்பிக் கொண்டிருந்த நிலை. இங்கு எவரும் இதற்கு முன்னம் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அறிவுக் கலைகளை மேனாட்டார் வகுத்தளிக்கின்றார் என்ற உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக் கழகம் நுழைந்தனர். அற்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும் பரிதாப உணர்வுடனே பாடம் கற்பிக்க முற்பட்டனர். பிற நாட்டில் என்னென்ன கண்டனர் என்ற வியப்பு உணர்ச்சிக்கே முதலிடம்; நம் நாடு ஏதேது அறிந்திருந்தது என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்!

இந்நிலையில் வளர்ந்தன பழம் பெரும் பல்கலைக் கழகங்கள் — ஆண்டான் அடிமைகட்கு. அன்பு காரணமாக அறிவு வழங்கிடவும் வேலைக்கு ஏற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைத்திட்ட இடங்கள் என்று அவை கருதப்பட்டன.

அவற்றினிலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்ற அறிவாளரில் மிகப் பலரும், நடையாலும், உடையாலும் நாட்டத்தாலும், பிறந்த நாட்டில் வாழுகின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்; அதிலே பெருமகிழ்வும் கண்டனர். நெடுங்காலம் இந்நிலை! இன்று அஃது பழங் கதை!!

மதுரைப் பல்கலைக் கழகம் அடிமைத் தளை அறுத்து, ஆளுதற்கு உரிமையும் தகுதியும் பெற்றோம் நாம் என்ற முழக்கமிட்டு விழித்தெழுந்த மக்கள் உலா வந்திடும் நாட்களிலே அமைந்துளது.

'ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்ற பாரதியின் வீர அழைப்புக் கேட்டு, அணி அணியாய் வீரர்கள் திரண்டு வந்தனர்; பிறகு எழுந்தது இந்தப் பல்கலைக் கழகம்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட்டது மட்டுமன்று, மனத் தளைகள் மெல்ல மெல்ல அறுபட்டிடும் நிலையையும் நாம் கண்டோம்; அந்தச் சூழ்நிலையிலேயே இப்பல்கலைக் கழகம் கண்டோம்; சிந்தனை நமது உரிமை என்ற குறிக்கோளுக்கான கோட்டம் இஃது என்பதனை உணர்கின்றோம்.

எல்லாம் பிற நாடுகளிலே உள. நம் நாட்டிலே ஏதும் இல்லை என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து; எமக்கு ஈந்திடுக! என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க, ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணி போல மங்கியதோர் ஓவியம் போல உளது; மாசு துடைத்திடுவோம். மணி ஒளியைக் காட்டிடுவோம் என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கி உள்ள காலம் இது; அதனைச் செவிலித் தாயாகப் பெற்றுளது இம் மதலை — மதுரைப் பல்கலைக் கழகம்.

எனவே, இதற்கென்று ஒரு தனித்தன்மை. இதற்காக ஒரு தனிப் பாதை இருத்தல் வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம் தமிழகத்துக் கருத்துக் கருவூலத் தன்னை உலகு காணுதற்கான வழிவகுக்கும் கோட்டமாகி, புலி பொறித்தான், கயல் பொறித்தான், ஆரியப் படை கடந்தான், கங்கை கொண்டான், கடாரம் வென்றான் என்றெல்லாம் புல்லரிக்கும் வரலாற்றினைப் படிக்கின்றோமே, அதற்கு ஒப்ப, குறளளித்தார் மேகலை ஒளி தந்தார், அகமும் புறமும் அறிவித்தார் என்று அவனியிலுள்ள நாடுகளில் வித்தகர் மெச்சிடத்தக்க, புது வரலாறு சமைத்திடுதல் வேண்டும்; அதற்கேற்ற அணிவகுப்பைத் திரட்டிடுதல் இந்தப் பல்கலைக் கழகத்தின் தனித் திறனாய் அமைந்திடுதல் வேண்டும். பாட முறை பயிற்சி முறை, தேர்வு முறை எல்லாமே இந்தத் தனி நோக்கம் கொண்டிடுதல் மிக நன்று. உரியவர்கள் இதுபற்றி ஆய்ந்தறிதல் வேண்டும். விருப்பம் உரைக்கின்றேன், வடிவம் கொடுத்திடும் பொறுப்பில் உள்ளோர் செய்திடுவர் எனும் ஆர்வம் கொண்டு.

அச்சம் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டு நிலை உயர்த்தல், பிற நாடுகட்கு நம் தனிச் செல்வம் ஈது எனக் காட்டிடல், அளித்திடல், இவை எமது பணி என்று கூறிடுவீர், இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிட வாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.


வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

## பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

- ★ குர்தாக்கள்
- ★ பெல் பாட்டம்கள்
- ★ லுங்கிகள்
- ★ சேலைகள்
- ★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

**தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.**

(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)

எழும்பூர் :: சென்னை-8.

இவை ஏட்டில் படித்திட இனிப்பவை; விளக்கிப் பேசிட ஏற்றவை; வியந்து கூறிடத் தக்கவை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டு வருதல் எளிதன்று; தொடர்ந்து கடைப்பிடித்தல் அரிது. அதற்குத் தளராத உறுதியும், மங்காத ஊக்கமும், ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும், தன்னல மறுப்பும் மிகமிகத் தேவை. பல்கலைக் கழகம், இந்தப் பண்பினைத் தந்திடும்; தந்துளது என்று எண்ணுகிறேன். ஆம்! என்று உமது சீரிய பணியின் மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை, இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ நமது உடைமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டிடின், விட்டு வைத்திடாமல், அவற்றினை நீக்கிடும் அலப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

அவர் கூறியுள்ளார். ஆகவே அஃது அறிவுடையதாகவே இருந்திடுதல் வேண்டும்—என்று எண்ணி இருந்திடாமல், அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தாராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடம் தந்து, உண்மையெனில், உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம், அன்று எனில் உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம் என்று முழக்கமிட்டு அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.

இந்நாட்டுத் தேள், எனின் கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேன், எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின் எமதாக்கிக்கொள்வோம் என்ற நோக்கம் தேவை; அதனைத் தந்திடவும் அதன் மூலப் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்றிட வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் வளர்ந்துள்ளன; வளருகின்றன; கல்விக்கூடங்கள் பெருகி வருகின்றன, எனினும் இன்றும் மக்கள் தொகையுடன், பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பட்டுப் பார்க்கும்போது, எத்தனை சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான், நாட்டு நிலை உயர்த்திட நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கின்றனர். நீவிர், இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை போதாமை, அறியாமை, கயமை என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர். பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வு பெற முந்திக்கொள்ளும் நிலையினர் என்ற நிந்தனையை நீக்கிடுக! நீள்வெற்றி பெற்றிடுக! என வாழ்த்துகின்றேன்.

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலைகுலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக் குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், கேடு நிறைநத இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான். நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், நம்பிக்கை இழந்துவிடவில்லை; மாறாக, அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதும் இல்லை; அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதனைக் காண நேரிடுவதாலும், அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது; நேர்வழி அடைபடுகிறது; கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகிறேன்.

எனவே, இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் திருந்திட வேண்டுமெனில், மற்றையோர், தமது சொல்லும் செயலும் பொதுநலனுக்கு உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக்கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகிறேன்.

அதேபோது, மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமைமிக்கது என்பதனை உணர்ந்து, அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தத்தையின் கழுத்திலே பூட்டிடவோ, கத்தும் கடல் மூழ்கி முத்து எடுப்பர்? தனக்கென வந்துள்ள தையல் அன்றோ அதற்கு உரியாள்!

அறைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட; எனக்கென்ன தருகின்றனர் ஏன் இந்தத் தாமதம் என்ற கணை தொடுக்க மட்டுந்தானோ? எவரும் அதுபோல் கூறுர்.

உம்மிடம் மிகுதியான நம்பிக்கை கொண்டுள்ளோரில் நானும் ஒருவன். புதியதோர் உலகு செய்வோம்—என்று பாடிச் சென்ற பாவலர் உம் போன்றோரை மனத்திற்கொண்டே பாடினர். உம்மிடமன்றி வேறு எவரிடம், தூய தொண்டாற்றும் திறனை எதிர்பார்க்க முடியும்?

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின் மாணவர்களிடம் மாண்புமிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர் பெற்றிடத்தக்க விதத்தில், பாடத்திட்டமும், பயிற்சி முறையும் பழகு முறையும், கல்விக்கூடங்களில் அமைந்திட வேண்டும்.

கல்விக்கூடங்களில் எண்ணிக்கை பெருகி அரசுகளின் வருவாய்த் துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில் கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது. படிப்படியாக, இந்நிலையினைச் செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது. ஆண்டு பல ஆகக்கூடும். அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு. அதற்கே பெரும் பொருள் ஈந்திட வேண்டியுள்ளது. அதுவும் எந்நிலையில் இப்பொருளைப் பெறுகின்றோம், தருகின்றோம் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

முழு வயிறு காணுதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணுர், வலியோரின் பகடைக்காய்கள், ஒடப்பர்—இவரெல்லாம்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடி மரமாய், பாதையாய், பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிவரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை எத்தனை ஏழைமைக்கு இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றார். என்பதனை மாணவர் உணர்ந்திடின்—அவர் உணர்வர்—அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும்; ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே, இத்தனை தந்திரம் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்; அஃது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும். கனவு காண்கின்றேனா? இல்லை; மாணவர் நினைப்பு அறிந்து கூறுகின்றேன். எதிர் காலம் அவர்களுடையது. அதனை இருளற்றதாக்கிடுவது அவர் பொறுப்பு. அதற்கான ஆற்றல் மிக்கார் அவர்கள் இஃது எனது நம்பிக்கை. ஒவ்வொரு நாட்டிலும், சிறப்புமிக்க கட்டங்களில், மாணவர்கள் முன்னணியில் நின்று பணிபுரிந்தனர் என்பதனை வரலாறு காட்டுகின்றது. இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடும் காலம், நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும்.

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக் கூடிய இலட்சியங்கள் நம்முன் நிற்கின்றன. ஆனால், அதே வரிசையில், வசீகரப் பூச்சுக்களுடன், மயக்க மூட்டத்தக்க பேச்சுக்களையும், குறிக்கோள் என்ற பெயரால் நிற்க விடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள் அனைவரும் ஏற்கத்தக்கது; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்.

நாட்டின் ஒற்றுமைக்காக—உன் மொழி உன் மரபு அழிந்திடவும் ஒருப்படவேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது—இதனை இலட்சியம் என்றோ திட்டமென்றோ கூறுவது.

நாட்டுப் பொருச்செல்வம் நாளும் வளரவேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்க இலட்சியம்—நாட்டுச் செல்வம் பெருகட்டும். அது நூலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது. இலட்சியமாகாது—அதனைக் கேலிக் கூத்தாக்குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம்;

கூடி வாழ்வோம் உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு—என்று முறை வகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக் குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், 'என்னேடு ஒன்ருக ஆடு இணைந்து விட்டது, நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில் 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

பட்டம் பெற்ருேரே உமது தேளிவுரை கிடைத்து மக்கள் இதுபோன்ற விளக்கம் பெற்றிட வேண்டுமென விழைகின்றேன்.

அறியாமை, வறுமை ஆகியவற்றினை ஒட்டிடும் ஆற்றல் படை திரட்டிடப் பல்கலைக் கழகம் ஏற்ற இடம் என்பதனுல் இவற்றினை விரித்துரைத்தேன்.

பயிற்று மொழி பாடமொழி ஆட்சி மொழி, இணைப்பு மொழி என்ற சொற்ருெடர்கள் வேகமாக உலவிடக் காண்கின்ருேம்.

'தாய்மொழி' என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தமிழ்மொழி நமது தாய் மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணைபெற, ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது.

இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும் இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை; நாட்டுப் பற்று அற்ற தன்மை என்றும், தேசியத் தன்மானம் அற்ற நிலை என்றும் கூறுவார் உளர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன்; கருதுவார் என்று கூறவில்லை காரணத்தோடு.

ஆங்கிலம், முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர். அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனுகவும் இனமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதை, தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணேம். தொழில் நுட்ப அறிவு பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது இந்தப் பேச்சு எழக் காணேம், மொழிபற்றி மட்டுந்தான் இப்பேச்சுப் பேசுகின்றனர். எனவேதான் அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்து இல்லை; கூற மட்டும் செய்கிருர்கள் என்றுறைத்தேன்.

ஆங்கிலம் கூடா என்று கூறுவதுடன், இந்தியே இணைப்புக்கு ஏற்ற மொழியென்று அவர்கள் வலியுறுத்தும்போது. கூறுபவரின் உண்மை நினைப்புப் வடிவமும் நன்ருகத் தெரிகிறது.

இந்தப் போக்கு வெற்றிபெற விடமாட்டோம் என மாணவருலகு உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கின்றேன். மொழிப்பற்றின் எடுத்துக்காட்டாகத் திகழும் மாணவர்கட்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோது, மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கல்களை, புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை நீக்குவதற்கான முயற்சிகளை மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்கவேண்டும், நம்பிக்கையுடன், என்று கேட்டுக்கொள்கின்றேன்;

பல்கலைக் கழகத்தில் பயிலுங் காலை, வாழ்க்கையின் நீண்ட பெரும் பயணத்திலே இது பாசறைப் பருவம் என்ற உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும்,

பட்டம் பெற்றிடும் நண்பர்களே! உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்த வண்ணம் இருப்பதனை அறிந்து அதற்கேற்ப உமது செயல் முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்;

இம் மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள், மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை, முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது.

இன்று புறப்படும் படை அறிவுப் படை; இப் பல்கலைக் கழகத்தினின்றும் அமைந்து வெளிக்கிளம்பும் முதற் படை; இதனை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, சென்று வருக, வென்று வருக என்று கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதம் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசு ஆகட்டும்; பண்பாடு உமது கவசமாகட்டும்; அறிவு உமது படைக்கலனுகட்டும்; அறநெறி உமது வழித்துணையாகட்டும்; உறுதியுடன் செல்வீர்; ஊக்கமுடன் பணிபுரிவீர்; ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ தரணிக்குத் துணை நின்றிடும் தகுதி பெற, சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

**சிறுகதை**

# ‘சுதா அழுதுகொண்டிருந்தாள் ஓசைப்படாமல்!’

(ஆர். பானுமதி)

“சுதா! நாளைக்கு ரவி வருகிறான் ஃபாரினிலிருந்து. இன்னும் ஒரு மாதத்திற்கு அவன் நம் மோட கெஸ்ட்! நீதான் அவனை நன்றாய் கவனிச்சுக்கணும்” என்றான் சாரங்கன்.

ஆபீஸிற்குக் ‘கேபிள்’ வந்ததிலிருந்தே ஆர்வத்தில் படபடத்துக் கொண்டிருந்தான் அவன்.

ரவி!

சுதா சற்றே அதிர்ந்தாற்போல் கணவனை நிமிர்ந்தாள். ரவியைப் பற்றி அடிக்கடி சாரங்கன் சொல்லி அவள் கேட்டிருக்கிறாள். அவன் காட்டிய அவன் புகைப் படத்தையும் அவள் பார்த்திருக்கிறாள். அப்போதெல்லாம் ரவி தன் கணவனின் மிக நெருங்கிய —அன்புக்குரிய சிநேகிதன் என்று எண்ணிக்கொள்வாள் அவள். அந்த எண்ணம் நெஞ்சில் ஒரு சுமையாய்க் கனக்கும் அவளுக்கு!

“ஆமாம் சுதா! ரவி! நான்கூட அடிக்கடி சொல்வேனே என் ஃபாரின் ப்ரெண்டைப் பற்றி... அதே ரவி! அவனை நீ பார்த்ததில்லையே? ஓ...அவன் மிக இனியவன் சுதா. பழகுவதற்கு உகந்தவன். நம் மேரேஜின்போது அவன் ஃபாரினில் இருந்தான். அங்கேதான் ஜாப் அவனுக்கு. அவனால் வரமுடியவில்லை. வருத்தப்பட்டுக் கொண்டான். வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்தான். சீக்கிரமே ‘லீவ்’ எடுத்துக் கொண்டுவந்து ‘மீட்’ பண்ணுகிறேன் என்றான். சொன்னபடி வரவும் செய்தான். ஆனால் துரதிர்ஷ்டம்......அவன் வந்தபோது நீயில்லை! புனாவுக்குப் போயிருந்தாய் பிறந்த வீட்டிற்கு! உன்னைச் சந்திக்க அவனுக்கு கொடுத்துவைக்கவில்லை. அவனைச் சந்திக்க உனக்குக் கொடுத்து வைக்கவில்லை...!!

சுதா நெடுமூச்செறிந்தாள். உணர்விலே லயித்து சாரங்கன் தொடர்ந்தான்;

“ரவி! அவனை நான் எப்படிச் சந்தித்தேன்? ஓ...அது ஒரு அற்புதம் சுதா! மிக அற்புதமான சந்திப்பு!”

சாரங்கன் நிறுத்தினான். மானசீகமாய் அந்தச் சந்திப்பை நினைவுக்குக் கொண்டு வருபவன்போல் கண்களை மூடிக்கொண்டு கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தான். பிறகு தொடர்ந்தான்:

“செறிந்த நீர்ப்பரப்பு! சுற்றிலும் ஜனத் திரள்! உணர்வுகளின் ஏகாந்தம்! நிலையாமையின் நெடுமூச்சு! மெரீனாவில் நின்றுகொண்டிருக்கிறேன் அப்போது. ஜனக் கூட்டம் அலைமோதுகிறது. தங்கள் அன்பிற்குரிய ஒருவரை...அபிமானத்துக்குரிய தலைவரை இழந்துவிட்ட மக்களின் துயரவெள்ளமே அது. எனக்கும் தெரியும் அவரை! மேன்மை தங்கிய ஜெர்னலிஸ்ட் என்ற முறையில் அதற்குமுன் அவரை நான் சந்தித்திருக்கிறேன். அவரிடத்தில் பேட்டி கண்டிருக்கிறேன். வெள்ளோட்டம்போன்ற அவர் மொழி வன்மையில் திகைத்திருக்கிறேன். அவர் பாலிஸியை வியந்திருக்கிறேன். ஓ! அவர் மிக இனியவர் சுதா! பழகுவதற்கு உகந்தவர். சிறந்த பண்பாளர். காஞ்சிபுரத்தில் பிறந்தவர். அண்ணா அண்ணா என்று அனைத்து மக்களாலும் அன்புடன் குடும்ப பாசத்துடன் அழைக்கப்பட்டவர். கொஞ்சகாலம் தமிழ்நாட்டுக்கு சீஃப்பாய் இருந்தவர். அன்றைக்கு அவர் போய்விட்டார். கான்ஸர் என்றார்கள். ட்ரீட்மெண்ட் நடந்தது முடியவில்லை போய்விட்டார். ஜனக் கூட்டம் தேம்பிக் கொண்டிருந்தது. ரவியும் இருந்தான் அந்தக் கூட்டத்தில்! என்னைப் போலவே அவனும் அவரிடத்தில் அன்புகொண்டிருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் விசுவாசம் செலுத்தியிருக்க வேண்டும். மிகச் சோர்ந்திருந்தான் அழுதிருக்கலாம். கண் சிவந்திருந்தது.”

சுதா சுவருக்கப்பால் சூனியத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்.

“அன்றைக்கு அவனால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஐ ஸே ரவி! நானும் பார்க்கவில்லை! முடியவில்லை; ஜனக்கூட்டம்தான் ஈயாய் மொய்த்துக் கொண்டிருந்ததே அவரை!...”

“பார்க் ஒன்றில் பெஞ்ச்ஒன்றில் அமர்ந்துகொண்டேன் தனியாக. ‘தனியாக?’ நோ. நோ. பக்கத்திலே ரவி! ஏகாந்தத்தில் மூழ்கியிருந்தான் அவன். மௌனமாகவே துயரத்தைப் பரிமாறிக் கொண்டோம். அப்புறம் பேசினான். முதல் பேச்சு! வாழ்க்கையின் தத்துவங்கள்...அதன் சோதனைகள்...சுதா! நீ கேட்கிறாயா?”

“ஓ...ஓ...”

“முதல் சந்திப்புத்தான் இப்படி ஆனால் அப்புறமும் அதன் பிறகும் நாங்கள் நிறையச் சந்தித்திருக்கிறோம் சுதா. மிக இன்பமாய் பழகியிருக்கிறோம். அப்போது உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கவில்லை. கல்யாணம் வேண்டாம் என்றிருந்தேன். ஓட்டலில் இருந்தேன். ரவி அடிக்கடி என் ரூமுக்கு வருவான். நாங்கள் நிறையப் பேசுவோம். அப்போதெல்லாம் அவன் ரொம்பத் தெம்பாயிருப்பான். என் பாலிஸியைக் கேலி செய்வான். நான் ‘டபுளாக’ வேண்டுமென்று வற்புறுத்துவான். ஒரு உரிமையிலே அப்படிச் சொல்வான். தன்னைப் பொறுத்தவரை தன் திருமணத்தைப் பற்றி அவன் ஏதோ ஒரு தெளிந்த முடிவில் இருந்தான். என்று நான் நினைக்கிறேன். ஏனோ அப்படிப்படும் எனக்கு! அவன் கண்களில் அப்படியொரு நம்பிக்கை!”

சாரங்கன் சட்டென்று நிறுத்தினான். எதையோ ஜீரணிக்க முயலும் பாவனையில்...அது முடியாத வேதனையில் மலங்க மலங்க விழித்தான்.

"........."

"பாரினுக்குப் போய்விட்டு உன்னையும் என்னையும் 'விஷ்' பண்ணுவதற்காக மறுபடியும் திரும்பி வந்தான் பார் ... அதுவரையில் தான் அவன் கண்களில் அந்த ஒளியைக் கண்டேன் சுதா நான்! ஆனால் மீண்டும் அவனை நான் சந்தித்தபோது அவன் கண்களில் அந்த ஒளியில்லை ... அந்த நம்பிக்கையில்லை! ஏங்கிப் போயிருந்தான்! எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை இற்றுவிட்டிருந்தது பார்வையில்..."

"........."

"அவன் ஏன் அப்படி மாறினான்? எனக்குப் புரியவில்லை. திடீரென்று அவன் கண்களில் ஏன் அந்தச் சோகம்? புரியவில்லை சுதா ...புரியவே இல்லை எனக்கு. ஆனால் எனக்கொரு யூகம் 'வெறும் யூகம்தான்!' ஆனால் நம்பக்கூடிய யூகம்..."

சாரங்கன் நிறுத்தினான். தன் ஊகத்தைச் சுதா புரிந்து கொள்வாளா, தன்னால் அதைப் புரிய வைக்க முடியுமா என்ற பாவனையில் லேசாய்த் தவித்தான்.

"ஒரு பெண் விஷயத்தில் அவன் ஏமாந்திருக்கலாம் சுதா! ஏனோ எனக்கு அப்படிப் படுகிறது. எந்த ஆதாரமும் இல்லாமல்......எந்த அடிப்படையும் இல்லாமல் தற்குறியாய் மனசில் படுபவை சில சமயம் வாழ்க்கையில் பொருந்துகிறது. இதுவும் அப்படி இருக்கலாம்.

"அவன் யாரோ ஒரு பெண்ணை விரும்பியிருக்கிறான். அவளைக் காதலித்திருக்கிறான். அந்தக் காதலில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறான். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவும் அவன் தீர்மானம் பண்ணியிருக்கிறான். திடீரென்று இதில் ஏதோ விபத்து நேர்ந்துவிட்டிருக்கிறது. அந்தப் பெண் ... அவனைப் பித்தாக்கிய அவள், அவனை ஏமாற்றிவிட்டிருக்க வேண்டும். வேறு யாரையோ கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டிருக்க வேண்டும். அதுவும் அவன் ஃபாரினுக்குப் போன பின்பு......திரும்பிவரும் முன்பு!

"........."

"ஃபாரினிலிருந்து வந்தான். சாந்தாக்ரூஸில் இறங்கினான். நேரே என் ரூமுக்கு வந்தான். நடுவில் யாரையோ பார்க்கப் போவதாய் சொல்லிக்கொண்டு போனான் ... திரும்பி வரும்போது மாறிவிட்டான்! அவன் 'அவளை'த் தான் சந்தித்திருக்கிறான். அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதைத் தெரிந்துகொண்டிருக்கிறான். அவன் கோட்டை இடிந்துவிட்டது. அவன் நம்பிக்கை சரிந்துவிட்டது. அவன் பிடிப்பு அறுந்துவிட்டது. ஏங்கிப் போய் விட்டான் அவன். எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை இற்றுவிட்டது பார்வையில்...! இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் சுதா! இப்படித்தான் நடந்திருக்க முடியும்! நீ நம்புகிறாயா சுதா இதை?"

"நம்ப வேண்டும்."

"ரவி எனக்கு அந்தரங்கமானவன்தான் என்றாலும் தன் காதல் விஷயத்தை அவன் என்னிடம் சொன்னதில்லை. கல்யாணத்தையே கிண்டல் பண்ணிக் கொண்டிருந்தேன் நான் அப்போது. காதல் என்பதைப் பற்றியோ அதன் பவித்திரத்தைப் பற்றியோ பிரமாதமான எந்த ஒபினியனும் இருந்ததில்லை எனக்கு. மனித மனத்தின் ஒரு பலவீனம் அது என்று நினைத்திருந்தேன். என் நினைப்பு ரவிக்குத் தெரியும். அதனால்தான் அவன் என்னிடம் சொல்லியிருக்க மாட்டான். காதலைப் பற்றியோ கல்யாணத்தைப் பற்றியோ எந்த மதிப்பும் இல்லாதவனிடம் அதைப் பற்றிப் பேசி என்ன பிரயோஜனம்? என்ன சுதா?"

"ஆமாம்."

"ஆனால் இப்போது நான் அப்படியில்லை சுதா! மிக அற்புதமாய் என் வாழ்க்கையில் நீ இடம் பெற்ற பிறகு நான் மாறிவிட்டேன்! காதல், வாழ்வின் ஓர் பசுமையான பகுதி என்று இப்போது நான் நினைக்கிறேன். நான் இப்படி மாறிவிட்டதை அறிந்தால் ரவி சந்தோஷப்படுவான் ... ஓ ...... உனக்கும் எனக்கும்தான் காலம் எப்படி முடிந்திருக்கிறது! அதன் முடிச்சு மிகப் பலமானது சுதா! தாம்பத்ய வாழ்வில் அது நம்மை இணைத்துவிட்டது. என்றாலும் என்னுள் ஓர் உறுத்தல்... உன் வாழ்வை நான் விலைபேசி விட்டேனா என்று......நீ நினைத்ததுண்டா சுதா அப்படி?"

"அவசியம் நேர்ந்ததில்லை."

"நிறையப் பணமிருந்தது. செலவழிக்க வழியில்லை. கல்யாணம் பண்ணிக்கொண்டால் செலவு பண்ண முடியும் என்று நினைத்தேன். மேட்ரிமோனியலில் விளம்பரம் போட்டேன். நீ வந்தாய், ஒரேயொரு நிபந்தனைதான். உன் குடும்பக் கடனை நான் அடைத்துவிட்டேன். என்னை நீ கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டாய். ஆனால் உனக்கும் எனக்கும் பொருத்தமேயில்லை சுதா! நீ இளையவள். அமைதியானவள். ஆழ்ந்து அடங்கி வாழ்க்கையை ரசிப்பவள். ஆனால் நானோ குழந்தை. நீயே அப்படிச் சொல்வாய் அடிக்கடி! உணர்ச்சிகளை என்னால் சமாளிக்க முடியாது. உடனுக்குடன் அதை இறக்கியாக வேண்டும். துன்பங்களையும், தோல்விகளையும் என்னால் பொறுக்க முடியாது. ஆனால் நீ அப்படியல்ல. துன்பங்களுக்கும் தோல்விகளுக்கும் நீ பழக்கப்பட்டிருப்பாய் என்று நான் நினைக்கிறேன்......"

சுதா சட்டென்று சாரங்கனை நிமிர்ந்தாள். எந்தத் துன்பத்திற்கும் எந்தத் தோல்விக்கும் தான் ஆளானதாய் அவன் நினைக்கிறான்? வெறுமனே இலக்கில்லாமல் பாய்ந்த ஒரு சாதாரணச் சொல்தானா அது? ஏதேனும் உள்ளீட்டைக் கொண்டதா?

"என் மனதில் ஓர் வேகம்! எப்படியாவது ரவியை மாற்றிவிட வேண்டுமென்று ...... மாற்றிவிட முடியும் என்று. சென்ற முறையே இதற்காக நான் மிக முயன்றேன். முடியவில்லை. அவன் துன்பம் என்ன என்றே எனக்குப் புரியவில்லை. இந்த முறை அவன் வருகிறான். நீ இருக்கிறாய்! நீ பெண் உனக்குச் சக்தி அதிகம். உன்னால் அவனைப் புரிந்துகொள்ள முடியும் பாசம் மிக்க ஒரு சகோதரியாய் நீ அவனிடத்தில் பரிவு காட்ட வேண்டும். அவன் துன்பம் என்ன என்பதை அறியவேண்டும். முடிந்தால் அதைக் களையவேண்டும். முடியாவிட்டால் மறக்கவேண்டும். நீயல்ல! ரவி! நீயும் நானுமாய் அவனுக்கு ஒரு நல்ல துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கல்யாணத்திற்குப் பிறகு நான் மாறிவிடவில்லையா? அப்படி அவனும் மாறிவிட முடியும். என்ன சுதா?"

"ஆமாம்."

"நாளைக்கு ரவி வருகிறான். நம் வீட்டில் தங்கப் போகிறான். ஒரு ஃபாரின் ரிடர்ன் நம்மோட கெஸ்ட்! நமக்குப் பெருமையில்

லேயா சுதா இது?''

"ஆமாம்."

* * *

ரவி வந்துவிட்டான்! நிலேயிலேயே அதிர்ந்தான். மௌனமாக உள்ளே வந்தான். தலையை குனிந்துகொண்டே பேசினுன். சாரங்கன் உற்சாகத்தில் துள்ளினுன். 'ரவி! ரவி' என்று அவனேச் சுற்றிச் சுற்றி வந்தான். சுதாவை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். இரண்டு பேரும் 'விஷ்' பண்ணிக்கொண்டார்கள். என்ன அபத்தமான விஷ்!

சுதா கவனித்துக்கொண்டாள் அவனே சாரங்கன் சொன்னபடி எந்தக் குறையும் வைக்காமல். அவள்தான் அவனுக்குச் சமைத்தாள். அவள்தான் அவனுக்குப் பரிமாறினுள். நாப்கின் மாற்றி வைத்தாள். குழாயைத் திருகி விட்டாள். டீ போட்டுக் கொடுத்தாள் இங்க்லீஷ் மெகஜினேக் கொண்டுபோய் வைத்தாள்! அவள் யந்திரமாய்ச் செய்தாள். அவன் யந்திரமாய் ஏற்றுக் கொண்டான்.

சாரங்கன் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தான். ஆபீஸ் நண்பர்களின் தங்கைகளேப் போய்ப் பார்த்தான். ஆபீஸிலேயே நல்லவளாக யாராவது இருக்கிருளா என்று கவனித்தான். அவனுக்குத் திருப்தியில்லே. ரவி ஃபாரின் ரிடர்ன்! அவனுக்கு நல்ல இடமாய்ப் பார்க்கவேண்டும்! புறப்படும்முன் முடித்துவிட வேண்டும்.

நாட்கள் விரைந்துகொண்டிருந்தன. சாரங்கன் சோர்ந்துவிட்டான். இதோ இன்னும் ஒரு வாரம்...ரவி புறப்பட்டுவிடுவான்! இந்த முறையும் அவனுல் அவனே மாற்ற முடியவில்லே! அவன் கண்களில் மீண்டும் அந்தப் பழைய ஒளியைக் காண முடியவில்லே! அவனுக்குத் தகுந்த ஓர் துணையைத் தேட முடியவில்லே சுதாவுமில்லேயா தோற்றுவிட்டாள் இதில்! அவள் பெண். அவளுக்குச் சக்தி அதிகம். அவளாலும் ஏன் முடியவில்லே?

ஒன்று...இரண்டு...ஓ! நாட்கள் விரைந்தேதான் ஓடிவிட்டன! இன்றைக்கு ரவி புறப்பட்டுவிட வேண்டும்!...இதோ அவன் புறப்பட்டுவிட்டானே!

அதே பஞ்சடைந்த விழிகளோடு...கையில் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு...ஏகாந்தமாய் நடந்து...விமானத்தின் படிகளில் மெல்ல ஏறி...மேல்மாடியில் நின்றுகொண்டு கையை ஆட்டுகிருன்! சாரங்கன்—சுதா தம்பதியருக்கு டாட்டாவாம்!......சிரிக்கிருனே? இல்லே முயலுகிருன்!

இதோ அறிவிப்புச் செய்கிருர்கள் பிரயாணிகள் ஏறியாகிவிட்டது. ஏணியை எடுத்தாயிற்று. விமானத்தின் கதவை மூடியாகிவிட்டது. ஜன்னலினூடே ரவியின் முகம்! சூனியத்தை வெறித்த பஞ்சடைந்த பார்வை!

"சுதா! ரவி ஏன் இப்படி இருக்கிருன் அவன் ஏன் என்னிடம் சரியாய்ப் பேசவில்லே சுதா? அவன் ஏன் கலகலப்பாய்ப் பழகவில்லே சுதா? ஐயோ...இந்த முறையும் என்னுல் அவனே மாற்ற முடியவில்லேயே சுதா! அவன் கண்களில் மீண்டும் அந்தப் பழைய ஒளியைக் காண முடியவில்லேயே! ரவி! ஓ......அடுத்த முறை வரும்போதாவது என் முயற்சிகள் பலிக்கட்டும் ரவி! ரவி என் பழைய ரவியாய்த் திரும்பட்டும் சுதா...!"

சாரங்கன் புலம்பினுன் குழந்தையாய்.

'அடுத்த முறை வரும்போது......'

சுதா பரிதாபமாய் சாரங்கனே நிமிர்ந்து பார்த்தாள். அடுத்த முறை வரும்போதாமே! இனி அவன் வரப்போவதில்லே என்று அவனுக்கு ஏன் தெரியவில்லே? சென்ற முறை வந்தபோதாவது தான் காதலில் தோல்வியடைந்து விட்டோம் என்பதை மட்டும் தான் தெரிந்துகொண்டு போனுன் அவன். இந்த முறை வந்தபோதோ...தன் காதலி தன் நண்பனின் மனேவியாய் வாழ்வதையும் கண்ணெதிரே கண்டுவிட்டுப் போயிருக்கிருன். இனி ஏன் அவன் வரப்போகிருன் இங்கே?

மேகமூட்டத்தினூடே விமானம் உயரப் பறந்துகொண்டிருந்தது. சுதா அழுதுகொண்டிருந்தாள் ஓசைப்படாமல்...!

## நண்பர்கள் பா. வாணன்-சுப்பையா

## மறைவு

**பேரறிஞர் அண்ணு** அவர்களின் பேரன்பிற்குப்பாத்திரமானவரும், கழகத்தின்பால் பற்றும், கழகத் தலேவர்களின்பால் பாசம் மிக்கவரும், மீனம்பாக்கம் விமான நிலேயச் சுங்க இலாகா அதிகாரியுமான நண்பர் **பா. வாணன்** என்கிற வேலாயுதம் அவர்கள் 13—2—74 சென்னேயில் சாலே விபத்தொன்றில் மறைவெய்தினுர் என்கின்ற செய்தியும், **நாவலர்** அவர்களுடைய அருமைத் தங்கை திருமதி விமலா அவர்களுடைய துணேவர் திரு. **சுப்பையா** அவர்கள் அமெரிக்காவில் மாரடைப்பினுல் மறைவெய்தினுர் என்கின்ற செய்தியும் எங்களே துயரக்கடலில் ஆழ்த்தியது.

நண்பர் சுப்பையா அவர்களின் மறைவால் துயருறும் **நாவலர்** குடும்பத்தினருக்கும், நண்பர் வாணன் அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆறுதல் மொழிகளே உரித்தாக்குகின்ருேம்.

—ஆசிரியர்.

"காஞ்சி"

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

திகைப்பும் அதிர்ச்சியும், மானக்கேடும், நெஞ்சுறுத்தலும் முள்படல்களாக அவளை, நசுக்க பிரம்பு நாற்காலியில் அமர்ந்தாள்.

சுவரில் மாட்டியிருந்த திருவள்ளுவர், வேதநேய பாவாணர், மறைமலையடிகள், பாவேந்தர், பெரியார் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். மிகப் பெரிய அளவிலிருந்த இராமலிங்க அடிகள் படத்திற்கு எப்போதோ போட்டுவைத்த காய்ந்துபோன பூமாலை அந்தக் கருகிய நிலையில் தொங்கிக்கொண்டிருந்தது.

உள்ளே சென்ற புகழேந்தி எரிவிழியில் தீயேந்தித்தணல் நோக்கால் வெள்ளிவீதியை அமைதியாகக் கொன்றுகொண்டிருந்தான்.

வெள்ளிவீதி நிமிர்ந்து நெடுநோக்கு நோக்கியவள், அவன் சினத்தைப் பொருட்படுத்தாத போக்குடன் தலைகுனிந்து கொண்டாள்.

கணவனை எடுத்தெறிந்தாற்போன்ற இந்தப் போக்கு புகழேந்தியைச் சீற்ற எரிமலையாக்கியது.

"வெள்ளிவீதி, உனக்கு அறிவில்லை? வீடுதேடி வந்தவர் வணக்கம் செலுத்தும்போது திரும்ப வணக்கம் தெரிவிக்‌ வேண்டும் என்ற பொது அறிவு கூட இல்லையா? சீ. அவள்மனம் என்னபாடுபடும்!"

"ஒவ்வொருத்தி மனமும் என்னென்ன பாடு படும் என உங்களுக்குக் கவலை இருக்கும். எனக்கென்ன? என் மனம் என்னபாடுபடுகிறது என்று தெரியுமா? இவர்க்கு?" என வெள்ளிவீதி வாய்விட்டுச் சொல்லவில்லை; தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

"ஏதாவது கேட்டால் ஊமைபோல வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்! ஆமை வீட்டைக் கெடுத்ததாம்! ஊமை ஊரைக் கெடுத்ததாம் என்பதுபோல-"

என்னும்போதே வெள்ளிவீதி ஆவிபறக்கும் சூடான காப்பியை இரு குவளைகளில் ஏந்திவந்து எதிரில் நின்றாள். அவள் விழிகள் தாழ்ந்திருந்தன. மேலேபேச இயலவில்லை புகழேந்திக்கு. இருகுவளைகளையும் வாங்கிக் கொண்டு கடுத்த நெஞ்சுடன் அடுக்களையினின்றும் வெளியேறினான்.

பாலு காப்பியின் சுவையை மனமாரச் சுவைத்துக் குடித்தான்.

"உங்கள் மனைவி காப்பியைக் குடித்தபிறகு, அவர் கை வண்ணத்தால் செய்த விருந்தைச் சாப்பிட வேண்டும் போலிருக்கிறதுங்க!" என்றான் பாலு குறும்புடன்.

உயிரில்லாத சிரிப்பைப் புகழேந்தி சிந்தினான்.

"நல்லது. நான் வருகிறேன், எங்கள் வீட்டில் விருந்தினர்வேறு வந்திருக்கிறார்கள்! "எனக்கூறி விட்டு வெளியேபோக முற்பட்ட பாலு," உம்... மறந்து விட்டேனே! உங்கள் மனைவியிடம் சொல்லுங்கள் நான் போய் வருகிறேன்." எனக்கூறிவிட்டு வெளியே சென்றான்.

புயல் புகுந்து வெளிப்போன வாழைத்தோப்புப் போல அந்த வீடு இருந்தது.

கடமைக்காகக் கட்டுப்பாட்டோடு வாழும் மனைவியைப்போல கணவனுக்குக் கொடிய ஒறுப்பையளிப்பவள் வேறு எவளும் இருக்க முடியாது. தன் உள்ளத்து உண்மை உணர்ச்சியை ஒளித்து வாழும் கரவுள்ளமுள்ள மனைவியைவிட வாழ்க்கைப் போராட்டம் ஒருவனுக்கு வேறிருக்காது! என எண்ணிய புகழேந்தி கன்னத்தில் கைவைத்தபடி அமர்ந்திருந்தான்.

"காதலிக்கத் தெரிந்த எனக்குக் காதலைக் காப்பாற்றத் தெரியவில்லை காதலுக்காகப் போராடவும் முடியவில்லையே! வாழத்துடித்த எனக்கு வாழும்வழி தெரியவில்லையே! என்ன செய்வேன்?" என எண்ணி மனம் நொந்து போனான்.

'ஆயிரம் ஆண்கள் செய்யும் குற்றங்கள் ஒரு பெண் செய்யும் சிறு தவறுக்கு இணையாகாது, வெள்ளிவீதி ஏன் ஒரு புதியவனிடம் இப்படி நடந்து கொண்டாள்! எவ்வளவோ இனியவள், அன்புள்ளவள் என்றெண்ணினேனே; இவ்வளவு கொடிய நெஞ்சமும் இருக்கிறதே!' என வியந்தான்.

முகிலன் உள்ளே வந்தான்.

"புகழேந்தி, நம் குடும்பத்தைச் சென்னைக்கே மாற்றிவிட முடிவுசெய்து விட்டேன். இங்கே வீட்டைக் குடிக்கூலிக்கு விட்டுவிடலாமா?" எனக் கேட்டான்.

"அம்மா, அதை விரும்பவில்லை. அவர்கள் இங்கேயே இருக்கவிரும்புகிறார்கள். நான் சென்னையில் குடும்பம் அமைப்பதைக்கூடச் சற்றுத்தள்ளி வைத்தாலென்ன?"

"ஊஊம். அதுமுடியாது. இனியும் நீ அதியமான் குடும்பத்துக்குத் தொல்லைதரலாமா? தங்கையும் அதை விரும்பமாட்டாள். ஆதலால், விரைவில் தனிக்குடிவைத்து விடுவது தவிர்க்க முடியாதது புகழேந்தி,"

'உம். அப்படித்தான் செய்யவேண்டும்."

"பிறரை ஆறுதல் செய்யத்தான் வாழவேண்டியுள்ளது. நமக்காக நாம் வாழ முடியாத நிலையே வாழ்க்கை முழுதும் அமைகிறதே! என்ன முரண்பாடான உலகியல் இது!" என எண்ணிய புகழேந்தி அமைதிக் கடலில் ஆழ்ந்தான்.

"சூழ்நிலைக்கு ஏற்பத் தம்மையும் தம்கொள்கைகளையும், செயல்களையும் உடனுக்குடன் மாற்றிக் கொண்டு முனைந்து வாழாதவர்கள் முன்னேற முடியாது; வாழ்க்கைப் போராட்டத்தில் வெல்லவும்

வெளிவருகிறது!

# 'காஞ்சி'

## அறிஞர் அண்ணா நினைவு—பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்
கழகத் தலைவர் கலைஞர்
கழகப் பொதுச்செயலாளர் நாவலர்
அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் — ஏ. கே. வில்வம்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் — மணிவேந்தன்
டாக்டர் சாலை. இளந்திரையன் — பல்லவன்
குருவிக்கரம்பை சண்முகம் — அரிமதி தென்னகன்
தாமரைக்கண்ணன் — தி. நா. அறிவுஒளி
இரா. கண்ணிமை — தமிழ்ச் சுரபி
கருமலைப் பழம்நீ — ஆத்தூர் பன்னீர்ச்செல்வம்
எழிற்கோவன்

மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்
அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு
மார்ச் திங்களில் வெளிவரவிருக்கிறது.

தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும். விலை ரூ. 3-00

மேலாளர், விவரங்கட்கு:
"காஞ்சி" அலுவலகம் : : காஞ்சிபுரம்-3.

"மலருக்கு" சேர்த்து சந்தா கட்டாத சந்தாதாரர்கள் ரூ. 3-00 அனுப்பி மலர் பெற்றுக்கொள்ளவும்.


இயலாது." என வெளிப்படையாக முகிலன் கூறினான்.

புகழேந்தி அவனை ஒருமுறை பார்த்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டான்.

முகிலனுக்குப் புகழேந்தியை எவ்வாறு தேற்றித் தெளிவிப்பதென்றே புரியவில்லை, உள்ளே சென்றான்.

சமையல் பணிகளில் வெள்ளிவீதி ஈடுபட்டிருந்தாள்.

"வெள்ளிவீதி, சென்னையில் குடும்பம் வைக்க ஏற்பாடு செய்கிறேன். நீ என்னம்மா சொல்கிறாய்?"

"அவர் என்ன சொல்கிறார் என்று கேள் அண்ணா. நான்வேறு சொல்லவேண்டுமா?"

முகிலன் புன்னகை பூத்தான்.

"சொல்லம்மா. அவன் என் பேச்சை தட்ட மாட்டான்."

"நான் மறுப்பேன் என நினைக்கிறாயா அண்ணா"

"அடேயப்பா? உம். நல்லது."

திரும்பிய முகிலன் தனிக்குடும்பம் அமைக்கும் பணியில் தலைப்படச் சென்றான்.

### 51

சென்னையில் புகழேந்தி புதுக்குடி அமைந்தது. வெள்ளிவீதி—புகழேந்தி ஆகிய இரு தனி உலகங்களும் ஒருசிறு வீட்டில் வாழ்ந்த வியப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது.

முன்பின் அறியாதார் இருவர் ஓரிடத்தில் பழக விரும்பாமல் ஒதுங்கி வாழ்வதைப் போல அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

புகழேந்தி காலையில் எழுந்து காலைக்கடன்களை ஆர அமர நிறைவேற்றிவிட்டு வந்து அன்றைய செய்தித்தாள்களை ஆராய்வான்!

படக்கதை முதலாக விளம்பரத் துணுக்கு ஈறாக அவன் படிக்காத இடம் செய்தித்தாளில் இராது.

ஒன்பது மணியளவில் உணவுண்டு சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு அலுவலகம் செல்வான்.

மாலை மீண்டும் சிறிதுநேரம் கதை நூல்கள் படிப்பான்; இல்லெனில் கடற்கரைக்கோ, உலாவி வருவதற்கோ, கடைக்கோ சென்று மீள்வான்.

உணவுக்குப் பிறகு அலுவலகப் பணிகளில் எஞ்சியவற்றை முடிப்பதில் முனைந்து விடுவான்.

பத்து அல்லது பனிரண்டுமணிவரை பணி நிகழும். களைப்பும் உறக்கமும் அவனைப் பிடர்பிடித்துந்த வந்து படுப்பான்!

இப்படியொரு சுழற்பொறிவாழ்வில் தங்கு தடையின்றி இயங்கினர் இருவரும்!

(வளரும்)

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

### குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு. அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.